**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடவாசல்**

**முன்னிலை:** M. முகம்மது அர்ஷத் பரீத், B.B.A., LLB., (HONS),
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
குடவாசல்.

2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 17-ஆம் நாள் புதன்கிழமை

CC. No. 334 of 2025

CNR No. TNTV15-001110-2025

அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர்,
குடவாசல் காவல் நிலையம்,
குற்ற எண். 1675/2020 ----- குற்றமுறையிடுபவர்

- எதிர் -

எதிரி1- பிரதாப், 24/2026,
த/பெ. தங்கராசு,
நெய்குப்பை சாலை,
மஞ்சகுடி.
எதிரி2- தங்கராசு,
த/பெ. குட்டியன். ----- எதிரிகள்

------

| *Statement as per rule 106 of criminal rules of practice, 2019* | | |
|---|---|---|
| **S.No** | **Description** | **Details** |
| 1. | Serial Number | Calender Case (C.C) No.334 of 2025 |
| 2. | Name of the Police station and crime Number | State Represented by Inspector of Police, Kodavasal PS. in Cr.No.1675/2020 |
| 3. | Name of the accused | T.Prathap |



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.17 06:17:13 +0530

<table>
<tr><td>4.</td><td>Father’s Name</td><td colspan="3">S/o. Thangarasu</td></tr>
<tr><td>5.</td><td>Occupation</td><td colspan="3">-</td></tr>
<tr><td>6.</td><td>Residence</td><td colspan="3">Neikuppai Salai, Manjakudi</td></tr>
<tr><td>7.</td><td>Age</td><td colspan="3">24/2026</td></tr>
<tr><td>8.</td><td>Date of occurrence</td><td colspan="3">30.09.2020</td></tr>
<tr><td>9.</td><td>Date of complaint<br>Date of filing Charge sheet</td><td colspan="3">01.10.2020<br>16.05.2023</td></tr>
<tr><td>10.</td><td>Date of apprehension</td><td colspan="3">-</td></tr>
<tr><td>11.</td><td>Date of release on bail</td><td colspan="3">-</td></tr>
<tr><td>12.</td><td>Date of commitment</td><td colspan="3">Not applicable</td></tr>
<tr><td>13.</td><td>Date of furnishing copies of document U/s 207 Cr.P.C.</td><td colspan="3">20.05.2026</td></tr>
<tr><td>14.</td><td>Date of questioning / Charge framing and plea of the accused</td><td colspan="3">On 22.05.2026 the accused questioned on substance of accusation U/s 294(b), 323, 354, 506(i) IPC. Accused denied as false case and pleaded not guilty and claims to be tried.</td></tr>
<tr><td rowspan="6">15</td><td rowspan="6">Date of commencements of trial -The date of examination – in chief and cross-examination of a witness</td><td>Witnesses</td><td>Examined in – Chief</td><td>Examined - in Cross</td></tr>
<tr><td>PW1</td><td>26.05.26</td><td>-</td></tr>
<tr><td>PW2</td><td>26.05.26</td><td>-</td></tr>
<tr><td>PW3</td><td>26.05.26</td><td>-</td></tr>
<tr><td>PW4</td><td>26.05.26</td><td>-</td></tr>
<tr><td>PW5</td><td>04.06.26</td><td>04.06.26</td></tr>
<tr><td>16.</td><td>The date of examination of the accused under section 313 of the code – Closed of trial</td><td colspan="3">12.06.2026</td></tr>
</table>



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.17 06:17:23 +0530

| | | |
|---|---|---|
| 17. | Sentence on order | முடிவாக, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 294(b), 323, 354, 506(i) இதச-ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுகளில் இருந்து எதிரியை கு.வி.மு.ச.பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |
| 18. | Service of copy of Judgment or finding on accused | No. The Judgment was uploaded on CIS portal and made available in E- Courts |
| 19. | Explanation of delay | There is no inordinate in the disposal of the case |
| 20. | Property order | No case property was seized and hence no property order passed. |

இவ்வழக்கானது இந்நீதிமன்ற இறுதி விசாரணைக்கு வந்தும், குற்றமுறையிடுபவர் தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-2 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.ஜெயகுமார், B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், சாட்சிய சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் இன்றுவரை இந்நீதிமன்ற பரிசீலினையிலிருந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**தீர்ப்புரை**

**அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம்** :-

1. குடவாசல் காவல் சரகம் மஞ்சக்குடி நெய்குப்பை சாலையில் உள்ள தனது பாட்டி இறந்த துக்க நிகழ்ச்சிக்கு 30.09.2020 ந் தேதி மாலை 05.00 மணியளவில் வந்திருந்த நன்னிலம் தாலுக்கா மூலமங்கலத்தை சேர்ந்த இவ்வழக்கின் வாதியானவர் வந்திருந்தபோது தனது மச்சான் மனைவியான சாட்சி-1 ஆன உஷாவிடம் 1 ஆம் எதிரி காமகுரோதமாக திட்டி சண்டைப்



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.17 06:17:27 +0530

போட்டுக்கொண்டிருக்கும் போது விலக்கி விட வந்த சாட்சி-1 யை 2 ஆம் எதிரி செங்கல்லால் தலையில் அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், 1 ஆம் எதிரி சாட்சி-1 யை கையால் அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், சாட்சி-2 யை கையால் நெஞ்சில் அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்தியும்,1ஆம் எதிரி போகும்போது உங்களை கொல்லாமல் விடமாட்டேன்னு என மிரட்டியும் எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 294(b), 323, 354, 506(i) IPC ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக இவ்வழக்கின் விசாரணை அதிகாரியால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இந்நீதிமன்றத்தால் மேற்படி குற்ற இறுதி அறிக்கையும், மற்ற ஆவணங்களையும் பரிசீலனை செய்து வழக்கானது கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. எதிரி நீதிமன்றத்தில் ஆஜரான போது வழக்கு ஆவணங்களின் நகல்கள் குவிமுச பிரிவு 207-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

4. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிக்கை அதனுடன் இணைந்த ஆவணங்களை பரிசீலினை செய்தபோது எதிரி மீதான குற்றச்சாட்டுக்கள் வனைவதற்கு போதிய முகாந்திரம் இருந்த காரணத்தினால் எதிரியின் மீது சட்டப்பிரிவு 294(b), 323, 354, 506(i) இதச-ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கி கூறி வினவியபோது எதிரி தன் மீதான குற்றத்தை மறுத்து தாங்கள் குற்றவாளி இல்லை என கூறினார். அதன் பின்னர் அரசுத்தரப்பில் சாட்சியமளிக்க உத்தரவிடப்பட்டது. இவ்வழக்கின் 2 ஆம் எதிரி தங்கராசு இறந்துவிட்டதாக தெரிவித்ததன் பேரில் இவ்வழக்கின் குற்றச்சாட்டுகளிலிருந்து 2 ஆம் எதிரி விளக்கப்பட்டுள்ளார்.



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.17 06:17:31 +0530

5. இந்த வழக்கில் அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 சாட்சிகள் அரசு தரப்பு சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்கள் முன்னிடப்பட்டுள்ளது.

6. இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து அறியப்பெரும் அரசு தரப்பு வழக்கின் விபர சுருக்கம் பின்வருமாறு :-

(i) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.1 அவரது சாட்சியத்தில், தான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து வந்து விவசயாம் வேலை செய்து வருகிறேன் என்றும், ஆஜர் 1ம் எதிரியை தனக்கு தெரியும் என்றும், அவர் தனது பக்கத்து வீட்டை சேர்ந்தவர் ஆவார் என்றும், 2ம் எதிரி இறந்துவிட்டார் என்றும், கடந்த சுமார் 5 வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் சரியாக நினைவில்லை என்றும், ஒரு நாள் தானும் உஷா என்பவரும் உஷாவின் வீட்டிலிருந்தபோது அவரது வீட்டு வாசலில் அடையாளம் தெரியாத 3 நபர்கள் சத்தம் போட்டு தகராறு செய்து கொண்டிருந்தார்கள் என்றும், தான் என்னவென்று பார்க்க சென்ற போது அந்த கூட்டத்திலிருந்த நபர்களில் யாரோ ஒருவர் தன்னை அடித்தார் அதில் தனக்கு தலையில் காயம் ஏற்பட்டது என்றும், அதை தடுக்க வந்து உஷா என்பவரையும் அவர்கள் தாக்கினார்கள் என்றும், அதில் அவருக்கும் உள்காயம் ஏற்பட்டது. காயம்பட்ட எங்களை எனது மனைவி ரஷ்யா இருசக்கர வாகனம் மூலம் குடவாசல் மருத்துவமனையில் முதலுதவிக்காக அழைத்து சென்று அங்கிருந்து திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு எங்களை சிகிச்சைக்காக சேர்த்தார் என்றும், தாங்கள் உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த போது போலிசார் தங்களை விசாரித்த போது தான் நடந்த சம்பவத்தை சொல்லி, காயத்தை ஏற்படுத்திய நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி வாய்மொழியாக சொன்னோம் என்றும், போலிசார் தன்னிடம் ஒரு பேப்பரில் கையொப்பம் வாங்கிக்



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.17 06:17:36 +0530

கொண்டார்கள் என்றும், தன்னிடம் தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது** என்றும், போலிசார் தன்னை விசாரித்த போது மேற்கூறிய சங்கதிகளை தான் சொன்னேன் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

(ii) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.2 அவரது சாட்சியத்தில், தான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து வந்து விவசயாம் வேலை செய்து வருகிறேன் என்றும், ஆஜர் 1ம் எதிரியை தனக்கு தெரியும் என்றும், அவர் தனது பக்கத்து வீட்டை சேர்ந்தவர் ஆவார் என்றும், 2ம் எதிரி இறந்துவிட்டார் என்றும், கடந்த சுமார் 5 வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் சரியாக நினைவில்லை என்றும், ஒரு நாள் தானும் கலையரசன் என்பவரும் தனது வீட்டிலிருந்தபோது எனது வீட்டு வாசலில் அடையாளம் தெரியாத 3 நபர்கள் சத்தம் போட்டு தகராறு செய்து கொண்டிருந்தார்கள் என்றும், அ.சா.1 என்னவென்று பார்க்க சென்ற போது அந்த கூட்டத்திலிருந்த நபர்களில் யாரோ ஒருவர் அ.சா.1ஐ அடித்தார் அதில் அவருக்கு தலையில் காயம் ஏற்பட்டது என்றும், அதை தடுக்க வந்து என்னையும் அவர்கள் தாக்கினார்கள் என்றும், அதில் தனக்கு உள்காயம் ஏற்பட்டது என்றும், காயம்பட்ட எங்களை அ.சா.1ன் மனைவி ரஷ்யா இருசக்கர வாகனம் மூலம் குடவாசல் மருத்துவமனையில் முதலுதவிக்காக அழைத்து சென்று அங்கிருந்து திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு தங்களை சிகிச்சைக்காக சேர்த்தார் என்றும், தாங்கள் உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த போது போலிசார் தங்களை விசாரித்த போது நான் நடந்த சம்பவத்தை சொல்லி, காயத்தை ஏற்படுத்திய நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.17 06:17:40 +0530

வேண்டி வாய்மொழியாக சொன்னோம் என்றும், போலிசார் தன்னை விசாரித்த போது மேற்கூறிய சங்கதிகளை தான் சொன்னேன் என்றும் சாட்சிமளித்துள்ளார்.

(iii) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.3 அவரது சாட்சியத்தில், தான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து வந்து விவசயாம் வேலை செய்து வருகிறேன் என்றும், ஆஜர் 1ம் எதிரியை தனக்கு தெரியும் என்றும், அவர் தனது பக்கத்து வீட்டை சேர்ந்தவர் ஆவார் என்றும், 2ம் எதிரி இறந்துவிட்டார் என்றும், சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்று தான் வீட்டிலிருந்தேன் என்றும், சம்பவத்தை தான் நேரடியாக பார்க்கவில்லை என்றும், அக்கம்பக்கத்தினர் தன்னிடம் சம்பவம் நடந்த பிறகு தெரிவித்தார்கள் என்றும், தான் உடனே சம்பவ இடத்திற்கு சென்று காயம்பட்டிருந்த தனது கணவர் அ.சா.1 ஐயும் அ.சா.2 ஐயும் மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தேன் என்றும், ஆஜர் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், போலீசார் விசாரணையிலும் மேற்கூறிய சங்கதிகளை தான் சொன்னேன் என்றும் சாட்சிமளித்துள்ளார்.

(iv) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.4 அவரது சாட்சியத்தில், தான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து வந்து விவசாயம் வேலை செய்து வருகிறேன் என்றும், ஆஜர் 1ம் எதிரியை தனக்கு தெரியும் என்றும், அவர் தனது ஊரை சேர்ந்தவர் ஆவார் என்றும், 2ம் எதிரி இறந்துவிட்டார் என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் தன்னுடைய கையொப்பம் இல்லை என்றும், வழக்கு சம்பவம் பற்றி தனக்கு தெரியாது என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சிமளித்துள்ளார்.



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.17 06:17:44 +0530

(v) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.5 அவரது சாட்சியத்தில், தான் தற்போது குடவாசல் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்த தலைமைக்காவலர் திரு. முருகானந்தம் மற்றும் புலன் விசாரணை அதிகாரிகளான உதவி ஆய்வாளர்கள் வினோத், அமல்தாஸ் ஆகியோர்கள் தற்போது வேறு காவல் நிலையத்தில் பணிபுரிந்து வருவதாலும் மேற்படி நபர்களின் கையெழுத்து மற்றும் கையொப்பம் நன்கு தெரியும் என்ற அடிப்படையிலும் காலதாமத்தினை தவிர்க்கும் பொருட்டு நீதியின் நலன் கருதி தான் இவ்வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன் என்றும், கடந்த 01.10.2020 ம் தேதி அன்று தலைமைக்காவலர் திரு. முருகானந்தம் என்பவர் குடவாசல் காவல்நிலையத்தில் நிலைய பொறுப்பிலிருந்தபோது திருவாரூர் அரசுமருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப்பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த சின்னகுஞ்சு மகன் கலையரசன் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்து பின் நிலையம் வந்து காவல் நிலைய குற்ற எண். 1675/2020 இதச சட்டபிரிவுகள் 294(b), 323, 354, 506(1) ன் கீழ் எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், **(புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.4 ஆகவும்முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடுசெய்யப்படுகிறது.)** என்றும், பின்னர் இவ்வழக்கு கோப்பினை புலன்விசாரணைக்காக உதவி ஆய்வாளர் வினோத் என்பவர் வசம் ஒப்படைத்துள்ளார் என்றும், மேற்படி உதவி ஆய்வாளர் வினோத் என்பவர் இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 02.10.2020 ம் தேதி அன்று காலை 08.00 மணியளவில் சம்பவ இடமான மஞ்சக்குடி நெய்குப்பை சாலை எதிரியின் வீடு அருகே சென்று சாட்சிகள் பிரபாகரன் மற்றும்



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.17 06:18:12 +0530

கருணாநிதி ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார் என்றும், **(பார்வை மகசர் அ.சா.ஆ.6 ஆகவும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடுசெய்யப்படுகிறது.)** என்றும், மேற்படி பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலான சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர் மேற்படி உதவி ஆய்வாளர் வினோத் என்பவர் பணிமாறுதலில் சென்றுவிட்ட படியால் இவ்வழக்குகோப்பினை நிலையபொறுப்பிலேயே வைத்துவிட்டார் என்றும், பின்னர் உதவி ஆய்வாளர் அமல்தாஸ் என்பவர் இவ்வழக்கினை மேல்விசாரணைக்கு எடுத்துகொண்டு மேற்படி பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலான சாட்சிகளை விசாரணை செய்த போது உதவி ஆய்வாளர் வினோத்திடம் கூறிய அதே சங்கதிகளை அவரிடம் கூறியதால் அவர் எவ்வித மறு வாக்குமூலமும் பெறவில்லை என்றும், பின்னர் சம்பவம் உண்மை என்று தெரிய வந்த நிலையில் எதிரிகள் தானாக காவல் நிலையம் ஆஜராணவர்களை குற்றக்காரணம் கூறி கைது செய்து நிலையப் பிணையிலேயே விடுவிக்கப்பட்டுள்ளார்கள் என்ற விவரத்தினை நான் தெரிந்துக் கொண்டேன் என்றும், பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட கலையரசன் மற்றும் உஷா ஆகியோர்களுக்கு விபத்து பதிவேடு பதிவு செய்தும் சிகிச்சை அளித்த திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மருத்துவர் ஜின் ரிவி டேனியல் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும் விபத்து பதிவேடு மற்றும் மருத்துவ சட்ட கருத்துரை பெற்று தாக்கல் செய்துள்ளர் என்றும், **(கலையரசன் என்பவரின் விபத்து பதிவேடு அ.சா.ஆ.8 ஆகவும், உஷா என்பவரின் விபத்து பதிவேடு அ.சா.ஆ.9 ஆகவும், கலையரசன் என்பவரின் மருத்துவ சட்ட கருத்துரை அ.சா.ஆ.10 ஆகவும், உஷா என்பவரின் மருத்துவ சட்ட கருத்துரை அ.சா.ஆ.11 ஆகவும்**



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.17 06:18:16 +0530

**குறியீடுசெய்யப்படுகிறது.)** என்றும், இத்துடன் அவரது புலன் விசாரணை முடித்து எதிரிகளின் செய்கையானது இதச சட்டபிரிவுகள் 294(b), 323, 354, 506(1)ன் கீழ் தண்டித்தக்க குற்றம் என கடந்த 16.05.2023 ம் தேதி அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றும் சாட்சிமளித்துள்ளார்.

7. அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து எதிரியை பாதிக்கக்கூடிய அம்சங்கள் குறித்து எதிரியிடம் குவிமுச பிரிவு 313(3)-ன் படி வினவியபோது எதிரி "பொய் சாட்சி" என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் "இல்லை" என்று கூறினார்கள். இவ்வழக்கில் குவிமுச பிரிவு 320-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

8. இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு மற்றும் சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டது.

9. இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரி மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

10. அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், இவ்வழக்கு சம்பவமானது அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தின் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிக்கு தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

11. இவ்வழக்கின் எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர், இவ்வழக்கில் சாட்சிகளிடம் காணப்படும் குறைபாடுகளை சுட்டிக் காண்பித்து அதனால் ஏற்பட்டுள்ள சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி அவரை விடுதலை செய்ய வேண்டுமென்று வாதிட்டார்கள்.



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.17 06:18:19 +0530

12. **அரசு தரப்பு சாட்சியங்களை மதிப்பிடுதல்**:-

இவ்வழக்கின் அ.சா.1 கொடுத்த புகாரில், வாதியான கலையரசன், குடவாசல் காவல் சரகம் மஞ்சக்குடி நெய்குப்பை சாலையில் உள்ள தனது பாட்டி இறந்த துக்க நிகழ்ச்சிக்கு 30.09.2020 ந் தேதி மாலை 05.00 மணியளவில் வந்திருந்த நன்னிலம் தாலுக்கா மூலமங்கலத்தை சேர்ந்த இவ்வழக்கின் வாதியானவர் வந்திருந்தபோது தனது மச்சான் மனைவியான சாட்சி-1 ஆன உஷாவிடம் 1 ஆம் எதிரி காமகுரோதமாக திட்டி சண்டைப் போட்டுக்கொண்டிருக்கும் போது விலக்கி விட வந்த சாட்சி-1 யை 2 ஆம் எதிரி செங்கல்லால் தலையில் அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், 1 ஆம் எதிரி சாட்சி-1 யை கையால் அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், சாட்சி-2 யை கையால் நெஞ்சில் அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், 1 ஆம் எதிரி போகும்போது உங்களை கொல்லாமல் விடமாட்டேன்னு மிரட்டியும் குற்றம் புரிந்துள்ளதாக புகார் அளித்துள்ளார்.

13. ஆனால், நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளித்த அ.சா.1 தனது முதல் விசாரணையில், தான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து வந்து விவசயாம் வேலை செய்து வருகிறேன் என்றும், ஆஜர் 1ம் எதிரியை தனக்கு தெரியும் என்றும், அவர் தனது பக்கத்து வீட்டை சேர்ந்தவர் ஆவார் என்றும், 2ம் எதிரி இறந்துவிட்டார் என்றும், கடந்த சுமார் 5 வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் சரியாக நினைவில்லை என்றும், ஒரு நாள் தானும் உஷா என்பவரும் உஷாவின் வீட்டிலிருந்தபோது அவரது வீட்டு வாசலில் அடையாளம் தெரியாத 3 நபர்கள் சத்தம் போட்டு தகராறு செய்து கொண்டிருந்தார்கள் என்றும், தான் என்னவென்று பார்க்க சென்ற போது அந்த கூட்டத்திலிருந்த நபர்களில் யாரோ ஒருவர் தன்னை அடித்தார் அதில் தனக்கு தலையில் காயம் ஏற்பட்டது என்றும், அதை தடுக்க வந்து உஷா என்பவரையும் அவர்கள் தாக்கினார்கள்



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.17 06:18:23 +0530

என்றும், அதில் அவருக்கும் உள்காயம் ஏற்பட்டது. காயம்பட்ட எங்களை எனது மனைவி ரஷ்யா இருசக்கர வாகனம் மூலம் குடவாசல் மருத்துவமனையில் முதலுதவிக்காக அழைத்து சென்று அங்கிருந்து திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு எங்களை சிகிச்சைக்காக சேர்த்தார் என்றும், தாங்கள் உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த போது போலிசார் தங்களை விசாரித்த போது தான் நடந்த சம்பவத்தை சொல்லி, காயத்தை ஏற்படுத்திய நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி வாய்மொழியாக சொன்னோம் என்றும், போலிசார் தன்னிடம் ஒரு பேப்பரில் கையொப்பம் வாங்கிக் கொண்டார்கள் என்றும், தன்னிடம் தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது** என்றும், போலிசார் தன்னை விசாரித்த போது மேற்கூறிய சங்கதிகளை தான் சொன்னேன் என்றும் புகார் மனுவில் கூறியுள்ள சங்கதிகளுக்கு முற்றிலும் நேர் எதிரான சங்கதிகளை கூறி சாட்சியம் அளித்துள்ளார். எனவே, அவரது சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவின்றி முரண்பட்டதாக உள்ளது என்பதை தெளிவாக காண முடிகிறது. இவ்வாறு இருக்கையில், கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 மற்றும் அ.சா.3 ம் பிறழ் சாட்சிகளாக மாறியுள்ளனர். பார்வை மகசர் சாட்சியான அ.சா.4 ம் பிறழ் சாட்சியாக மாறியுள்ளார். அவர்களை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்ட போதிலும், அரசு தரப்பில் அவருக்கு ஆதரவாக அவர்களிடமிருந்து எவ்வித சாட்சியமும் குறுக்கு விசாரணையில் பெறப்படவில்லை.

14. எனவே, அரசு தரப்பு வழக்கில் கூறியுள்ளவாறு எதிரிகள் சம்பவத்தில் ஈடுபட்டதற்கோ, அரசு தரப்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை புரிந்ததற்கோ போதிய முகாந்திரம் இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்படி சாட்சிகள் அரசு தரப்பிற்கு



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.17 06:18:27 +0530

ஆதரவாக சாட்சியளிக்காத பட்சத்தில் அ.சா.5-ன் சாட்சியத்தை மட்டுமே வைத்துக்கொண்டு எதிரிகள் குற்றவாளிகள் என்று கருதுவது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

15. மேலும், இவ்வழக்கின் நிகர்நிலை புகார்தாரரான அ.சா.1 எதிரியுடன் சமாதானம் செய்து கொண்டு கு.வி.மு.ச பிரிவு 320-ன் கீழ் ஒரு மனுவினை தாக்கல் செய்து அது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அந்த சமாதான மனுவில் இருதரப்பினரும் ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்துள்ளதையும் காணமுடிகிறது.

16. இந்நிலையில் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் *Madan Mohan Abbot **Vs** State of Punjab reported in (2008) 4 SCC 582 : (2008) 2 SCC (Crl.) 464* என்ற வழக்கில் வழங்கியுள்ள முன்தீர்ப்பில் பத்தி 5-ல் பொதுவாக குற்ற வழக்குகளில் பாதிக்கப்பட்ட நபரும், எதிரியுடன் சமாதனமாக செல்லும்போது அவற்றை தீர்மானிப்பது குறித்து எடுத்துரைத்துள்ள வழிமுறைகள் பின்வருமாறு :

> *“....We need to emphasize that it is perhaps advisable that in disputes where the question involved is of a purely personal nature, the Court should ordinarily accept the terms of the compromise even in criminal proceedings as keeping the matter alive with no possibility of a result in favour of the prosecution is a luxury which the Courts, grossly overburdened as they are, cannot afford and that the time so saved can be utilized in deciding more effective and meaningful litigation. This is a*



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.17 06:18:31 +0530

*common sense approach to the matter based on ground of realities and benefit of the technicalities of the law."*

17. இவ்வழக்கின் ஆவணங்களை கவனமாக ஆராயும்போது, இவ்வழக்கில் உள்ள பிரச்சனை முற்றிலும் தனி நபர் தன்மையுடைய வினா சம்மந்தப்பட்டதாக இருக்கிறது என்பதையும், அரசுத் தரப்புக்கு சாதகமான நிலையில் முடிவினை எட்ட முடியாத நிலையில் இந்நிலையில், இவ்வழக்கை நடப்பில் வைத்திருப்பது ஒரு ஆடம்பரமே என்றும், இவ்வழக்கை முடிவுக்கு கொண்டுவருவதன் மூலம் நீதிமன்றத்தின் பெரும்சுமையை குறைப்பதுடன் நீதிமன்றத்தின் நேரத்தை சேமிப்பதிலும், அதனை அர்த்தமுள்ள வழக்குகளை மிகவும் நன்முறையில் தீர்வு காண பயன்படுத்தவும் இயலும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

18. எனவே, இவ்வழக்கில் 1 ஆம் எதிரியின் மீது சட்டப்பிரிவு 294(b), 323, 354, 506(i) IPC ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபிக்கப்படாததால், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து அவரை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்ய இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**<u>உத்தரவு</u>**

19. முடிவாக, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து 1 ஆம் எதிரியின் மீது சட்டப்பிரிவு 294(b), 323, 354, 506(i) இதச-ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுகளிலிருந்து கு.வி.மு.ச.பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.17 06:18:35 +0530

20. எதிரிகள் எழுதிக்கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்தாகும் என்று உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் சான்றுபொருட்கள் ஏதும் தாக்கல் செய்யப்படாத காரணத்தினால் அதனை பொறுத்து உத்தரவு ஏதும் பிறப்பிக்கவில்லை.

என்னால் இத்தீர்ப்புரை சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக கணிணியில் சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஜுன் திங்கள் 17-ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.17 06:18:39 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

குடவாசல்.

**இணைப்பு:-**

**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:-**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. கலையரசன்-புகார்தாரர் |
| அ.சா.2 | திருமதி.உஷா-கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.3 | திருமதி. ரஷ்யா- கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.4 | திரு. கருணாநிதி- பார்வை மகசர் சாட்சி |
| அ.சா.5 | திரு. கலியுகவர்ணன்-உதவி ஆய்வாளர் |

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 01.10.2020 | புகார் வாக்குமூலத்தில் அ.சா.1 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | 26.05.2026 | சமாதான மனுவில் உள்ள அ.சா.1 ன் கையொப்பம் |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.3 | 26.05.2026 | சமாதான மனுவில் உள்ள அ.சா.2 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.4 | 01.10.2020 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.5 | 01.10.2020 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.6 | 01.10.2020 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.7 | 01.10.2020 | மாதிரி வரைப்படம் |
| அ.சா.ஆ.8 | 30.09.2020 | கலையரசன் என்பவரின் விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.9 | 30.09.2020 | கலையரசன் என்பவரின் விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.10 | 01.10.2020 | கலையரசன் என்பவரின் மருத்துவ சட்ட கருத்துரை |
| அ.சா.ஆ.11 | 30.09.2020 | உஷா என்பவரின் மருத்துவ சட்ட கருத்துரை |

**எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**:- இல்லை

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றுப்பொருட்கள்**:- இல்லை

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.17 06:18:44 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

குடவாசல்.

**வழக்கு சுருக்கம்**

| | | |
|---|---|---|
| 1. | எதிரி நீதிமன்ற காவலில் இருந்த நாட்கள் | - |
| 2. | குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | 17.12.2025 |
| 3. | குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்ட நாள் | 22.05.2026 |
| 4. | தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை | எதிரி தரப்பில் கு.வி.மு.ச.பிரிவு 320-ன் கீழ் 26.05.2026 |

| | | | | |
|---|---|---|---|---|
| | மனுக்களின் விவரம் | அன்று தாக்கல் செய்யப்பட்ட மனு தள்ளுபடி செய்யப்பட்டது. | | |
| | | அரசு தரப்பில் கு.வி.மு.ச.பிரிவு 311-ன் கீழ் 04.06.2026 அன்று தாக்கல் செய்யப்பட்ட மனு அனுமதிக்கப்பட்டது. | | |
| 5. | சாட்சிகள் விசாரணை | **Witness** | **Date of Chief** | **Date of Cross** |
| | | PW-1 : | 26.05.26 | - |
| | | PW-2 : | 26.05.26 | - |
| | | PW-3 : | 26.05.26 | - |
| | | PW-4 : | 26.05.26 | - |
| | | PW-5 : | 04.06.26 | 04.06.26 |
| 6. | கு.வி.மு.ச. பிரிவு 313-ன் கீழ் எதிரிகளிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 12.06.2026 | | |
| 7. | எதிரி தலைமறைவு காலம் பற்றிய விவரம் | - | | |
| 8. | மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விவரங்கள் | - | | |

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.17 06:18:49 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

குடவாசல்.